2013 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆத்தூர் தொகுதி, கல்லாநத்தம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று கோரியுள்ளார்கள். இப்பகுதியில், அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு, கால்நடைகளின் எண்ணிக்கை 3,000–க்கு மேற்பட்டு இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பின் திருவுருவமே, நீதியின் குருகுலமே, சுட்டெரிக்கும் சூரியனை வீழ்த்திய எங்கள் கார்மேகமே, (மேசையைத் தட்டும் ஒலி) புதிய சிந்தனையை உருவாக்கிய ஐந்தாவது வேதமே, மாட்சிமை பொருந்திய மாண்புமிகு அம்மா அவர்களுடைய பாத மலர்களை வணங்குகிறேன். நான் இந்தக் கேள்வியை கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுவதற்கு முன்பாக, ஆத்தூர் தொகுதி, கல்லாநத்தம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்க அனுமதியளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், என் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 289, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

289—

இணை மின் உற்பத்தி

***22230—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூர் சர்க்கரை ஆலையில் இணை மின் நிலையம் அமைக்கும் பணியை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் மூலமாக, 79.18 கோடி செலவில், சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில், 15 மெகா வாட் நிறுவுதிறன் கொண்ட இணை மின் நிலையம் அமைக்கின்ற பணிகள் துரிதப்படுத்தப்பட்டு, 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை 75 சதவிகிதம் பணிகள் முடிவுற்றிருக்கின்றன; மீதப் பணிகள் டிசம்பர் 2013—க்குள் முடிக்கப்பட்டு, மின் உற்பத்தி தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் தெரிவித்தபோது, டிசம்பர் மாதம் இணை மின் நிலையம் அமைக்கின்ற பணி முடிந்துவிடும் என்று கூறினார்கள். மோகனூர் சர்க்கரை ஆலையில், 2013—2014 ஆம் ஆண்டு கரும்பு அரைவைப் பருவம் அக்டோபர் மாதம் முதல் தொடங்குகிறது. எனவே, நடப்பு கரும்பு அரைவைப் பருவத்திற்கு முன்பாகவே, இணை மின் நிலையம் அமைக்கின்ற பணிகளை விரைந்து முடிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதல்வராக ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னர்தான், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இணை மின்

2013 ஏப்ரல் 22]

நிலையத்திற்கு குறுகிய காலக் கடனாக 352 கோடி ரூபாயை ஒதுக்கி, அந்தப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று ஆணையிட்டு, தற்போது அந்தப் பணிகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக கரும்பு அரைவைப் பருவக் காலம் முடிவதற்கு முன்பாக முயற்சி செய்து, மோகனூர் சர்க்கரை ஆலை இணை மின் நிலையத்தில் மின் உற்பத்தி தொடங்குவதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவாக நடவடிக்கை எடுத்து, கரும்பு அரைவைப் பருவத்திற்கு முன்பாக பணிகள் முடிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தமிழகத்திலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இணை மின் நிலையங்கள் உள்ள ஆலைகள் எத்தனை என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 12 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி நிலையங்கள் துவங்க இருக்கின்றன. ஏற்கெனவே, 3 சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி நிலையங்கள் துவங்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதில் மின் உற்பத்தி குறைவாக இருக்கின்ற காரணத்தால், மீண்டும் அதிகப்படுத்துவதற்காக, 7–1/2 மெகா வாட்டிலிருந்து 15 மெகா வாட்டாக உயர்த்துவதற்காக, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, மொத்தம் 12 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில்

அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 290, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

290—

பத்திரப் பதிவு அலுவலகங்கள்

***7216—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் உள்ள பத்திரப் பதிவு அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பதிவுத் துறையில், வாடகைக் கட்டடத்தில் இயங்கும் அனைத்து சார்–பதிவாளர் அலுவலகங்களுக்கும் 5 ஆண்டுகளுக்குள் சொந்தக் கட்டடம் கட்டுவதென மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, முதற்கட்டமாக, 2011–2012 ஆம் நிதியாண்டில், அரசாணை (நிலை) எண் 57, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 12–4–2012–ல், பழுதடைந்த அரசுக் கட்டடங்கள் மற்றும் தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் 52 சார்–பதிவாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.26.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. அடுத்தகட்டமாக, நடப்பாண்டில் அரசாணை (நிலை) எண் 144, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 20–11–2012–ல் . . .